மாகாண கல்வித் திணைக்களம் - வாராந்தப் பாடசாலை

பாடம்: தமிழ் இலக்கிய நயம்

வாரம் - 05

தரம்: 11

ஆக்கம்: ஆசிரியை T.பேபி ஷாலினி
கே/ சாந்த மரியாள் தமிழ் மகா வித்தியாலயம்

**பின்வரும் செய்யுள்களை வாசித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

தங்க வளைக்கைகள் தொட்டுச் சமைத்தது
சாலக் கமழுதையா இதில்
அங்கமெல்லாம் மிகப் பொங்கி
வழிந்திடும் அன்பு மிகக் கலந்ததையா

கொட்டிய உப்பு கசப்பென்றாலும் உள்
கூடியினிக்குதையா இது
விட்டுப் பிரிகையில் சொட்டுக் கண்ணீர் பட்ட
விண்ணின் அமுதையா

சொன்னபடி நடவாத துடிப்பயல்
தொட்டுச் சுவைத்ததையா இது
சின்னஞ் சிறுகுழந்தை அளைந்தது
தெய்வ அமுதமையா

ஆகக் கரிந்து பொரிந்தது என்றாலுமே
அன்பு மணக்குதையா இது
வேக வைக்காதது என்றாலும்
எனக்கொரு விந்தை உருசியையா

ஊது குழல் சத்தம் கேட்டு அவதிப்பட்டு
ஓடி வருகையிலே இது
பாதி வழி வந்து தாமரைக் கை தந்த
பச்சை அமுதமையா

கட்டிய அன்புக் கயிற்றினில் சுற்றிய
கட்டுப் பொதி இதையா இதைக்
தொட்டுச் சுவைக்கையில் உள்ளமெல்லாம்
ஒரு சோதி மிளிருதையா

i. கணவன் மனைவிக்கு இடையிலான பரஸ்பர அன்பு எவ்வாறு புலப்படுகின்றது?
ii. தலைவி சமைத்த உணவை தலைவன் எவ்வாறெல்லாம் புகழ்ந்துரைக்கின்றான்?
iii. விட்டுப் பிரிகையில் சொட்டுக் கண்ணீர் பட்ட விண்ணின் அமுதையா.. எனும் தொடரின் வெளிப்படும் நயத்தினை விளக்குக?
iv. பாடலில் புலப்படும் உவமையணி ஒன்றினை எடுத்துக் காட்டி விளக்குக?
v. மனைவியின் சமையல் தாமதமாகி விட்டது என்பது பாடலில் வெளிப்படுமாற்றினை எடுத்துரைக்க?